

ஒளிர்விடும் சித்தாந்த தீபங்களைத் தூண்டிவிடும்,

ஞானவடிவானவும் திருமேனி என்ற கற்பகமரத்தின் ।

தளிர்போல் விளங்கும் திருக்கர ஞானமுத்திரையை

ஞானம்பெற அடியேன் இடையறாது தியானிக்கின்றேன் ॥ 23.

ஜபமாலையை மிகுந்த அழகுடன் தாங்கி விளங்குகின்ற,

அமுதமென்ற ஞானத்தை எடுப்பதில் ஆர்வமுள்ளவற்கு ।

உபகரணம் போன்று விளங்குகின்ற உன்தன் மிகச்சிறந்த,

குமுதம்போன்ற வலக்கரத்தை உள்ளத்தில் தியானிக்கிறேன் ॥ 24.

சிவந்த மிகுந்த ஒளி நிரம்பிய பவழக்குவியல்களை,

ஞானமென்ற கடலின் ஆழத்திலிருந்து எடுப்பார் போன்று ।

உவந்த உம்பக்தர்களுக்கு உதவிட விளங்கும் உந்தன்,

வாமக்கரத்தை அடியேனும் மனதால் தியானிக்குன்றேன் ॥ 25.

இழையோடும் வெண் ஒளிகளால் அஞ்ஞானமென்ற ,

இருளை அறவே நீக்கியெம்மை மகிழச்செய்கின்றாய் ।

மழைக்கால மேகத்தில் காணப்படும் மதியைப்போன்று,

அருளை வழங்கிடும் உன்தனை நான் காண்கின்றேன் ॥ 26.

கருணை அலைகளை பொழியும் உம் பார்வையென்ற
அமுதத்தை, பக்தர்கள் செவிகளில் பெருக்கெடுத்துஓட ।
அருளை வழங்கிடும் காமதேனுவைப் போன்றுள்ள,
அமுதவாக்குகளை என்தன் மூலம் தந்தருள வேண்டும் ॥ 27.

யுக்திவாதம் செய்யும் கற்றவர்கள் நிறைந்த சபையில்,
சிங்கத்தைப்போன்று நடுவில் நுழைந்து சிறந்தவர்கள் ।
மத்தியில் ஜெயித்திட விரும்பும் இந்த அடியவனின்,
சிங்காதனம் என்ற நாவில் அமர்ந்து அருளிடவேண்டும் ॥ 28.

மந்திரங்களின் வடிவிலான ஒலியால் உம்மை நினைத்து,
ஓங்கி உலகளந்த உம்தன்மையை அடியேனும் அடைந்து ।
தந்திரவாதம் செய்யும் போரில் உம்மையே நினைத்து,
ஓங்கி நிற்கும் சூரனாய் அடியேனையும் மாற்றிடவேண்டும் ॥ 29.

நிதிபோன்ற கலைகளுக்கு அடியேன் உறைவிட மல்லேன்,
புனிதத் தீர்த்தங்களில் அடியேன் நீராடப்பெற்றேனல்லேன் ।
கதியற்றவர்களை ஏற்றுக் கொள்ளும் உம்கருணைக்கு,
புதியப் பாத்திரமாக அடியேனும் இன்று ஆகியுள்ளேன். । 30.

பற்பல குயுத்திகளாலும் அசைக்க முடியாதவனாக,
உள்ளத்து சந்தேகங்க அழுக்குகளை கழித்தவனாக ।
பற்பல உண்மைக்கருத்துகள் உந்தன் திருவருளால்,
உள்ளதுள் தோன்றி அடியேனை சிறப்பிக்கவேண்டும் ॥ 31.

குமுதக்கரங்களில் நீங்கள் ஆழி, சங்கு, புத்தகமுமேந்தி,

வெள்ளைத்தாமரையில் ஞானமுத்திரையுடன் அமர்ந்த, ।

அமுதம்போன்ற வெண் ஒளியுடன் கல்விக்கடவுளாய்,

கொள்ளைகொள்ளும்விதம் மனதில் தோன்றிட வேண்டும் ॥ 32.

அரிபோல் கவிகளுக்கும், தர்க்க வாதிகளுக்கும் விளங்கும்,

கவிதார்க்கிக சிம்மமான வேங்கடநாதனால் இயற்றபெற்ற ।

பரிமுகன் மீதான இத்தோத்திரத்தை பக்தியுடன் தினமும்,

கவிபாடும் வல்லமையும், கல்வியும் பெற்றிடப் படியுங்கள் ॥ 33.

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண குணஸாலிநே ।

ஸ்ரீமதே வேங்கடேஸாய வேதாந்த குரவே நம: ॥

அன்புள்ள பக்தர்களுக்கு,

ஸ்வாமி தேஸிகன் அருளிச்செய்த ஸ்ரீ ஹயக்ரீவர் மீதான இந்த ஸ்தோத்-

திரத்தை உங்கள் குழந்தைகள் அநுதினமும் படித்து அவர்கள் எழுதும் எல்லாத் தேர்வுகளிலும் சிறந்த மதிப்பெண்களைப பெற்று வாழ்வில்

முன்னேற அந்த பரிமுகக்கடவுளின் தாள் பணிகின்றேன்.

தாஸன்,



பொய்கையடியான்